


Jun 12, 2010

# ஓர் இரவு – திரை விமர்சனம்




தமிழ் சினிமாவில்.. ஏன் இந்திய சினிமாவில் முதல் முறையாய் பாயிண்ட் ஆப் வீயூவில் எடுக்கப்பட்ட படம். பாயிண்ட் ஆப் வியூ என்றால்? பெரிதாய் வேறொன்றும் இல்லை.. கதையின் நாயகன் கண் தான் கேமரா என்று வைத்துக் கொள்வோம் அவன் மூலம்பார்க்கும் பார்வையின் மூலம் கதை சொல்லப்பட்டிருக்கிறது அது தான் பாயிண்ட் ஆகப் வியூ என்பதாகும்.

நகுலன் பொன்னுசாமி இறந்துவிடுகிறான். மிஸ்ட்ரி டிவி என்கிற டிவியில் நகுலனின் இறப்பு பற்றிய ஒரு நிகழ்ச்சியில் ஆரம்பிக்கிறது. யார் இந்த நகுலன் பொன்னுசாமி?



நகுலன் பொன்னுசாமி ஒரு வெற்றிகரமான பாராநார்மல் ஆசாமி. ஆவி, பேய், பூதம் போன்ற அமானுஷ்யங்களை பற்றி ஆராய்ச்சி செய்பவன். அதற்காகவே லண்டனுக்கு சென்று படித்தவன். இதுவரை 18 கேஸ்களை வெற்றிகரமாக முடித்த அவனுக்கு 19வது கேஸாய், ஆனந்த் என்கிற ஒரு தொழிலதிபர் தான் வாங்கி வைத்திருக்கும் மூணாறு பங்களாவில் ஏதோ அமானுஷ்யங்கள் இருப்பதாய் சொல்லி, அதை கண்டுபிடித்து தரச் சொல்லி பணிக்கிறார்.

பகலில் பார்த்தாலே நடு முதுகில் சில்லிட வைக்கும் பாழடைந்த பங்களா. அங்கிருக்கும் அமானுஷ்யங்களை பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு நாள் இரவு தங்க முடிவெடுத்து, அங்கிருக்கும் அறைகளை எல்லாம் தன் சி.சி.டிவி நெட்வொர்க்குள் அமைத்து தன் எலக்ட்ரானிக் சங்கதிகளுடன் களம் இறங்குகிறான். எல்லாம் சரியாக போய்க் கொண்டிருந்த நேரத்தில் கடைசி இரண்டு நிமிடங்களில் நடக்கும் விஷயங்களில் நகுலன் பொன்னுசாமியின் வாழ்க்கையையே திருப்பி போட்டு விடுகிறது



ப்ளேர் விச் ப்ராஜெக்ட், பாரநார்மல் ஆக்டிவிட்டி, போன்ற படங்க்ளை தலையில் வைத்து கொண்டாடிய நாம், நிச்சயம் இந்த தமிழ்படத்தையும் கொண்டாட வேண்டும். அவ்வளவு டெடிகேஷனோடு உழைத்திருக்கிறார்கள் இப்படக்குழுவினர்.

படம் ஆரம்பத்திலிருந்தே நம்மை கூடவே பயணிக்க வைக்கும் உத்தி மிகப்பெரிய வெற்றியை கொடுத்திருக்கிறது. நகுலன் சிகரெட் பிடித்தால் நாமும் பிடிக்கிறோம், அவன் சோம்பல் முறித்தால் நாமும் சோம்பல் முறிக்கிறோம். அவன் பதட்டம் அடைந்தால் நாமும் அடைக்கிறோம். ஒரு டாகு பிலிம் போன்ற முறையில் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கும் உத்தி பாராட்டத்தக்கது. நடு நடுவே படத்தின் மேல் இருக்கும் எதிர்பார்ப்பை எகிற வைக்கும் முயற்சிக்கு வெற்றியையே கொடுக்கிறது.

படத்தின் ஹீரோ.. ஒளிப்பதிவாளர் சதீஷ்.. பாயிண்ட் ஆப் வீயுவில் மூணாறின் விஷுவலாகட்டும், அந்த ஹேங்கிங் பிரிட்ஜ் காட்சியாகட்டும், பேய் வீட்டை ஒரு சாதாரண மனநிலையோடு பார்க்கும் பார்வைக்கும், அதே வீட்டை பதட்டத்தோடு பார்க்கும் பார்வைக்கும் தன் கேமரா மூலமா உணர்வுகளை வெளிப்படுத்தி நடு முதுகில் ஐஸ் உறைய வைக்கும் அவருக்கு ஒரு சபாஷ்..



வெங்கட் பிரபு ஷங்கரின் பிண்ணனி இசை, ஹரிஷங்கரின் எடிட்டிங் என்று டெக்னிக்கல் டிபார்ட்மெண்ட்கள் அனைத்தும் வரிந்து கட்டிக் கொண்டு உழைத்திருக்கிறது. கதை திரைக்கதை வசனம் இயக்கம். ஹரிஷ், ஹரி ஷங்கர், கிருஷ்ண சேகர். எனக்கு தெரிந்து இரட்டையர்கள் இயக்கி பார்த்திருக்கிறோம். தமிழ் சினிமாவில் முதல் முறையாய் மூன்று இயக்குனர்கள் இயக்கியிருக்கிறார்கள்.

டிஜிட்டலில் படமெடுக்கிறோம் என்று வழக்கமான மதுரை, அரிவாள், பாட்டு, காமெடி என்று போகாமல் டிஜிட்டல் சினிமாவுக்கான சரியான கதை களத்தை கையிலெடுத்துக் கொண்டு, ஜெயித்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். பாயிண்ட் ஆப் வீயூ என்று முடிவெடுத்தவுடன் அதற்கேற்றார் போன்ற ஷாட் டிவிஷன்கள், கேரக்டர் பேசும் வசனங்கள், நடவடிக்கைகள் எல்லாமே மிக இயல்பு. அதே போல அந்த கேரக்டருக்கு வரும் பதட்டம், பயம் எல்லாமே அவ்வளவு இயல்பாய் ஒட்டிக் கொள்கிறது நமக்கு. மூணாறு போகும் வழியில் லிப்ட் கேட்கும் வில்லிவாக்கம் ரவியின் பேச்சினிடையே உலவும் காமெடியும், பின் அதே கேரக்டரை வைத்து உறையும் இடமும் சூப்பர். " இந்த மாதிரி இடத்தில நாம ரொம்ப ஜாக்கிரதையா இருக்கனும், ஏன்னா சில சமயம் நம்ம நிழலே நம்மை பயமுறுத்தும்" என்று நகுல் பேசும் வசனங்கள் மிக ஷார்ப். க்ளைமாக்ஸை நோக்கி போகும் நேரத்தில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாமோ என்று தோன்றுகிறது.

படத்தில் குறைகளே இல்லையா என்று கேட்பவர்களுக்கு.. இருக்கிறது.. அதெல்லாம் ஒரு பெரிய விஷயமாய் படவில்லை. நிச்சயம் இருக்கிறது. அதையெல்லாம் மீறி படம் என்க்ராசிங்காக இருப்பதை மறுக்க முடியாது. இளைஞர்களாய் இணைந்து ஒரு வித்யாசமான பட அனுபவத்தை கொடுத்ததிற்காக வாழ்த்துக்கள்.

**ஒர் இரவு - வரவேற்க வேண்டிய முயற்சி. நிச்சயம் பார்கலாம்.**

**டிஸ்கி:** படம் பார்த்துவிட்டு கலைப்புலி தாணு " ஒரு நாலு நாளைக்கு தனியா வீட்டில இருக்க முடியல" என்றாராம். சவுண்ட் இன்ஜினியர் கண்ணன் இரவில் வேலை செய்ய மாடிக்கு போக துணையில்லாமல் போக வேயில்லையாம். நேற்று படம் பார்த்த பத்திரிக்கையாளர்கள் ஒருவர் முகம் வெளிறி.. வெளியில் போய் உட்கார்ந்ததை பார்த்தேன்.

கேபிள் சங்கர்